

# ‘வெற்றி வீரர்கள் தம்மை நம்புவார்கள்- யாருமே தம்மை நம்பாமல் இருக்கும் பொழுது’

சுப்ரமணியம் ராமகிருஷ்ணன் (ராம்கி)

**'நீங்கள் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களாக இருக்கலாம். எனினும் உங்கள் எல்லோரையும் விட நான் புத்திசாலி'.**

கிரிக்கெட் விளையாட்டு ஒரு மதமாகவும், இந்திய விளையாட்டு வீரர்கள் தெய்வங்களாகவும் கருதப்பட்டு வரும் நமது நாட்டில், அந்த விளையாட்டு வீரர்களிடமே நேரடியாக ஒரு அந்நியர் கூறினார் என்றால் நம்பும்படி இருக்கிறதா?

நம்பும்படி இல்லைதான் ; என்றாலும், முன்னாள் வங்கி ஊழியரான ராம்கி 2004 ஆம் ஆண்டு இந்திய விளையாட்டு வீரர்களிடம் இப்படித்தான் கூறினார். இந்தியாவில் கிரிக்கெட் ஆடும் முறையே இதன்பிறகு - ஒரு வங்கி ஊழியரால்- மாறியதும், உலகிலுள்ள பல விளையாட்டுகளின் முறையும் இதன் பிறகு மாற்றம் அடைந்ததும் கூட நம்பும்படி இல்லைதான்.

எனினும் இதுவே நிதர்சனமான உண்மை!

## நம்பிக்கையூட்டுகிற தொடக்கம்

தெரு கிரிக்கெட், பள்ளி கிரிக்கெட், புத்தக கிரிக்கெட் என்று பலவித கிரிக்கெட்டுகள் ஆடும் நமது நாட்டின் பள்ளிச் சிறார்கள் போலவே, தென் சென்னையில் வளர்ந்த ராமகிருஷ்ணன், பள்ளி கிரிக்கெட் குழுவில் ஆடுவதற்காகவே, பி.எஸ். சீனியர் பள்ளியிலிருந்து சாந்தோம் மேல்நிலைப் பள்ளிக்கு மாறினார். பிறகு விவேகானந்தா கல்லூரியின் கிரிக்கெட் குழுவின் தலைவராகவும் ஆனார். நம்பிக்கையூட்டும் இள விளையாட்டு வீரரான இவர், சென்னை முதல் பிரிவில் (First Division), பிரசாத் கிரிக்கெட் குழுவிற்காக ஆடி முதல் பருவத்திலேயே 650 ஓட்டங்கள் குவித்தார். தமிழ் நாட்டுக் குழுவில் ஆடும் வாய்ப்பு கிட்டத்தட்ட நிச்சயமாக, இன்னும் கடு முயற்சி செய்தால் இந்திய கிரிக்கெட் குழுவில் இடம்பெறும் கனவும் நிறைவேறி இருக்கும்.

## வாய்ப்புகளும் உண்மை நிலையும்

பட்டப்படிப்பும், முதுநிலைக்கல்வியும் முற்று பெற்ற நிலையில், ராம்கி ஒரு முடிவு எடுக்க வேண்டியிருந்தது - கிரிக்கெட் ஆட்டத்தில் கிட்டத்தட்ட முழு நேரமும் ஈடுபட வகை செய்யும் அவ்வளவாக நுட்பமில்லாத தனியார் நிறுவன வேலையா அல்லது கிரிக்கெட்டில் அவ்வப்பொழுது ஈடுபட வாய்ப்பு அளிக்கும் பாதுகாப்பான வேலையா?

பழமைவாதம் மிகுந்த அவரது குடும்பம், இரண்டாவது விருப்பத்தேர்வை எடுக்குமாறு அறிவுறை கூற, விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டு முறையில் இந்தியன் வங்கியில் சேர்ந்தார். எனினும், இந்தியன் வங்கி, முதல் பிரிவுக் குழுவில் (First Division) இல்லாததால், அவரது கிரிக்கெட் படிநிலை (Hierarchy) இறங்கி முன்னேற்றம் தடைபெற்றது. மிகச் சிறப்பாக ஆடி, தனது வங்கிக்குழுவினை பல பந்தயங்களில் வெற்றி அடையச் செய்து, முதல் பிரிவுக்கு இந்தியன் வங்கி உயர்த்தப்படுவதற்கு வழி வகுத்தார். எனினும், வயதும் அவரோடு போட்டி போடவே, இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற வேண்டும் என்ற கனவு, என்றும் கனவாகவே இருக்கும் என்ற உண்மை புலனானது.

## விதியின் விளையாட்டு

எனினும் விதி வித்தியாசமாக விளையாடத் தொடங்கியது.

இந்தியன் வங்கி, அடையாறு காந்தி நகர் கிளையில் பணியாற்றி வந்த ராம்கி, பலராலும்-குறிப்பாக வாடிக்கையாளர்களால்-விரும்பப்பட்டார். வாடிக்கையாளர்களுக்குப் பல வங்கிப் பரிவர்த்தனைகளிலும், இன்னும் பலவிதங்களிலும் உற்சாகத்துடன் உதவி செய்த ராம்கியை உன்னிப்பாகக் கவனித்து வந்த ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளர், அவரது எதிர்காலம் ஒரு பொதுத்துறை வங்கியுடன் முடிவடையப் போவதில்லை, போகக்கூடாது என்று முடிவு செய்தார்.

தொழில் முனைவராகும் ஆர்வத்துடன் தனியார் ஊடக நிறுவனத்தின் தலைவர் பதவியை ராஜினாமா செய்திருந்த பொறியாளர்-மேலாளர் சங்கரன் தாம் நிறுவ இருக்கும் 'பணம் வழங்கும் நுழைவாயில்' (Payment Gateway) நிறுவனத்திற்கான சரியான குழுவை அமைக்கும் முனைப்பில் இருந்தார். காந்தி நகர் இந்திய வங்கியின் வாடிக்கையாளரான அவரது பார்வையில் மிகவும் துடிப்புடன் செயல்பட்டு வந்த ராம்கி பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தமது புதிய நிறுவனத்தில் சேருமாறு ராம்கிக்கு அழைப்பு விடுக்க, இரண்டு மகள்கள் ஒரு மனைவி என்று குடும்பஸ்தாராக இருந்த ராம்கியின் மனத்துள் பெரும்போராட்டம். இறுதியில், தனது இதயத்தின் கூற்றுப்படி, 'பாதுகாப்பு மிகுந்த' வங்கிப்பணியினை விட்டு விட்டு, இடர்கள் நிறைந்த, எனினும் சவால்கள் மிகுந்த புதிய வேலையை ஏற்க முடிவு செய்தார்.

## இன்னொரு திருப்பம்

'மேரு டெக்னாலஜிஸ்' இன் பிறப்பும், 'டாட்காம்' (Dotcom) இன் சரிவும் ஒன்றாக நிகழ்ந்தது. இணைய வங்கி சேவையில் (Internet Banking Services) இருந்ததால், 'மேரு' வின் நிதி நிலைமை மோசமாக இருந்தது. பெருவோட்டத்தில் (Mainstream) இருக்கலாம் அல்லது விளையாட்டு சம்பந்தப்பட்ட விஷயத்தில் கவனம் செலுத்தலாம் என்று முடிவினை ராம்கியிடமே நிறுவனம் அளிக்க, தமக்கு மிகவும் மகிழ்ச்சியினை அளிக்கும் விளையாட்டை ராம்கி தேர்ந்தெடுத்ததில் ஐயம் ஒன்றும் இல்லை.



வியாபாரத்தில் நிலைத்து நிற்க, ஒரு நியூசிலாந்து நிறுவனத்தின் காணொளி மூலம் விளையாட்டு வீரர்களின் இயக்க பகுப்புப் பொருளை (Video based Motion Analysis System) 'மேரு' எடுத்துக்கொண்டது. விளையாட்டு வீரர்களின் செயல்திறனை புள்ளி விவரங்களுடன் ஆய்வு செய்து அவர்களது மேம்பாட்டிற்கு வழி செய்த இந்தப் பொருள், இந்திய கிரிக்கெட் அணிக்குப் பெரிதும் உதவி செய்யும் என்று உணர்ந்தார் ராம்கி. இவருக்கு கிரிக்கெட்டின் மீது இருந்த ஈடுபாட்டையும், உற்சாகத்தையும் கண்ட் நியூசிலாந்து நிறுவனம், இந்தியா முழுதும் வினியோகிக்கும் உரிமையினை 'மேரு'விற்கு வழங்கியது.

அந்தக் காலத்தில் மடிக்கணினி (Laptop) மிகுவிலையுள்ளதாகவும், அவ்வளவு புழக்கத்தில் இல்லாமலும் இருந்தது.நிதி நிலைமை மோசமாக இருந்த நிலையில், 'மேரு', ராம்கிக்கு ஒரு மடிக்கணினி கொடுக்க முன் வந்தது, ஒரு நிபந்தனையின் பேரில்-10 உரிமங்களாவது அவர் விற்க வேண்டும். சவால்களைக் கண்டு என்றுமே அஞ்சாத ராம்கி, நாட்டிலுள்ள பல கிரிக்கெட் கூட்டமைப்புகளிடம் செயல்முறை விளக்கம் அளித்தார். எனினும், ஒரு கணினி மென்பொருள் கிரிக்கெட் ஆடக் கற்றுக் கொடுப்பதா என பலரும் இதனை நிராகரித்தனர். இதன் பயன்பாட்டினை உணர்ந்த சிலரோ, இதன் விலையை அறிந்ததும் பின்வாங்கினர். பந்தயங்களைப் பார்த்து, ஆய்வு செய்து அதனை அணிக்கு அளிக்கும் பகுப்பாய்வு சேவை (Analytical Servie) ஒன்றே இதற்கான தீர்வு என்று உணர்ந்தார். இதனைப் பல கிரிக்கெட் அமைப்புகளும் வரவேற்றன. இதற்காக அவருக்குத் தேவைப்பட்டது மென்பொருள் (Software) மட்டுமல்ல, வன்பொருளும் (Hardware) தான்.

## பரிசு

இந்திய கிரிக்கெட் அணியின் அப்பொழுதைய பயிற்சியாளராக இருந்த ஜான் ரைட்டின் முன் பரையேற்றம் (Presentation) நிகழ்த்தும் வாய்ப்பு வெகு விரைவில் ராம்கிக்குக் கிட்டியது. நேஷனல் கிரிக்கெட் அகாடமியில் (National Cricket Academy)

ஒரு மணி நேரம் மட்டுமே ஒதுக்கப்பட்ட இந்த பரையேற்றம், ஒரு நாள் முழுவதும் நடைபெற்றது. தனது எல்லாவிதமான அலுவல்களையும் ஒதுக்கி வைத்ததோடு அல்லாமல், இந்திய அணியின் தலைவர், வீரர்கள், தேர்வுக்குழு என அனைவரையும் அழைத்த ரைட், இறுதியில் ராம்கியிடம் கூறியது- ‘இந்திய அணியுடன் பயணிக்க இயலுமா-ஆனால் அவ்வளவாகப் பணம் கிடைக்காது’.

சொர்க்க லோகத்தையே கண்ட மகிழ்ச்சியில் திளைத்த ராம்கி, ‘100 கோடி மக்களின் உவர்ச்சியின் முன் பணம் எம்மாத்திரம்’ என்று பதிலளித்தார். 2003ஆம் ஆண்டு பெங்களூரில் நிகழ்த்தப்பட்ட ‘5 பேர்களின்’ கடின தேர்வுகளுக்குப் பிறகு இந்திய அணியின் பகுப்பாய்வாளராக சேர்ந்தார்.

### நிராகரிப்பு

மிகுந்த உற்சாகத்துடன் இந்திய அணியுடன் பயணித்த ராம்கி, அணியின் செயல்திறனை கூர்ந்து ஆராய்ந்தார். எனினும், எல்லா நல்ல விஷயங்களைப் போல இதற்கும் சில எதிர்ப்புகள் வந்தன. கிரிக்கெட் விளையாட்டினை நன்கு அறிந்தவர் என்றாலும், ஒரு கணினியை வைத்து நமது செயல்திறனை ஆராய்வதா என்று சந்தேகத்துடனும், தலைக் கனத்துடனும் கேள்வி எழுப்பினர் இந்திய அணியின் சில மூத்த வீரர்கள். 2004ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான பந்தயத்தின் முந்தைய நாள், இது உக்கிரமடைய, ஒரு மூத்த வீரர், ‘நீங்கள் இதற்கு முன் கிரிக்கெட் எனும் விளையாட்டை ஆடியதுண்டா’ என்று கேட்டார். தன்னம்பிக்கை மிகுந்த குரலில் ராம்கி, ‘நீங்கள் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களாக இருக்கலாம். எனினும் உங்கள் எல்லோரையும் விட நான் புத்திசாலி’ என்று பதிலளித்தார். இதைக் கூறுவதற்கு மிகவும் தைரியம் தேவை. என்றாலும், இதன் பிறகு, தொழில் நுட்பமும் விளையாட்டும் கலந்த அபூர்வமான கலவையின் மதிப்பினை உணர்ந்த இந்திய வீரர்கள், திறந்த மனதுடன் இவரையும், இவரது கணினியையும் ஏற்றுக்கொண்டனர்.

### எழு நிலை

அணியுடன் பல நாடுகளுக்கும் பயணித்த ராம்கி, பந்து வீச்சாளர்கள், மட்டையாளர்கள், கிட்டி முனை காப்பாளர்கள் (Wicket Keepers), நடுவர்கள் என எல்லோரது அசைவுகளையும் கூர்ந்து ஆய்ந்து அதன் மூலம் பலரது உத்திகளையும், நுணுக்கத்தையும் சரி படுத்தினார். அணியின் திறமுறை (Strategy)க்கு ஆலோசனை வழங்கி இதன் மூலம், இந்திய அணி உலக கிரிக்கெட்டில் மிகுந்த திறனுடன் பரிமளிக்க வழி வகுத்தார்.

### தொழில் முனைவு

2006ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தாமே சுயமாக இதைச் செய்தால் என்ன என்று தோன்றவே, திரு.சங்கரன் மற்றும் மேரு குழுவினர் அளித்த உற்சாகத்தில், ‘ஸ்போர்ட்ஸ் மெகானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்’ ஐத் தொடங்கினார். தாமே உருவாக்கிய மென்பொருள் உபகரணங்கள் (Software Tools) மூலம் விலைகுறைந்த அதே சமயத்தில் தரமான விளையாட்டு பகுப்பாய்வு விளையாட்டு உலகுக்குக் கிட்டியது. விளையாட்டில் மிகுந்த ஆர்வமுள்ள, கடின உழைப்புடன் கடுமையான பயணங்களை மேற்கொள்ளவும் தயங்காத இளைஞர்கள் அடங்கிய குழுவை கவனத்துடன் உருவாக்கினார்.

### ‘கடவுள்கள்’-பங்காளிகள்

ஒருமுறை மேற்கிந்திய தீவுகளுக்கு இந்திய அணி பயணித்தபொழுது, விமானத்தில் ராம்கிக்கு இடையில் அமர்ந்திருந்தவர்கள் இருவர் - சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக். 'வீரர்களாக இருப்பதைத் தாண்டி, விளையாட்டின் இன்னொரு பரிமாணத்தை நீங்கள் தொடலாமே’ என்று திடீரென்று அவர்களைப் பார்த்துக் கேட்டார் ராம்கி. ‘எப்படி’ என்று கேட்டார் சச்சின். ‘என்னுடன் எனது நிறுவனத்தில் சேர்வதன் மூலம்’, என்று பதிலளித்தார் ராம்கி. விளைவு?

இன்று சச்சின், சேவாக் இருவரும் அவரது நிறுவனத்தின் பங்குதாரர்கள். ராம்கியும் அவரது ஸ்போர்ட்ஸ் மெக்கானிக்ஸ் குழுவும் பல நாடுகளிலுள்ள கிரிக்கெட் அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்தனர். கிரிக்கெட் தவிரவும், ஹாக்கி, ஸ்காவ்ஷ் போன்ற விளையாட்டுகளிலும் பகுப்பாய்வில் ஸ்போர்ட்ஸ் மெக்கானிக்ஸ் ஈடுபட்டுள்ளது.

### குடும்பமும், யதார்த்தமும்

2007ஆம் ஆண்டு பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின் பொழுது அவரது மகளிடமிருந்து வந்த மின் அஞ்சல், அவரை உலுக்கியது - ‘அப்பா! நாங்கள் உங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள். எங்களை மறந்து விட்டீர்களா?’

தனது குடும்பத்தாருடன் மிகக் குறைவான நேரமே செலவழித்த உண்மை அவரை அப்பொழுது சுட்டது. இதுவே சமயம் என்று முடிவு செய்து, தனது சக பணியாளரான தனஞ்சய் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

### ஸ்போர்ட்ஸ் மெக்கானிக்ஸ்-இன்றும் நாளையும்

இன்று, பல விளையாட்டுகளுக்கும் செயல்திறன் பகுப்பாயும் நிறுவனமாக விளங்கி வரும் ஸ்போர்ட்ஸ் மெக்கானிக்ஸ், உலகிலுள்ள பல விளையாட்டு வீரர்களுக்கும், அணிகளுக்கும் நிகழ் நேர பகுப்பாய்வு (Real Time Analytics) வழங்கி வருகிறது. வலைவாசல்கள் (Portals), ஊடக அறைகள் (Media Rooms) விளம்பர காணொளிகள் (Promotional Videos), நேரடி ஒளிபரப்புகள் என பல வசதிகளையும் விளையாட்டு அமைப்புகளுக்கு வழங்கி வருகிறது. ஐ.சி.சி., பி.சி.சி.ஐ., ஹாக்கி இந்தியா, ஸ்காவ்ஷ் ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா, சி.எஸ்.கே., ராயல் சாலஞ்சர்ஸ், மும்பை இந்தியன்ஸ் போன்ற அமைப்புகள் இவர்களது பிரதான வாடிக்கையாளர்கள்.

வேலையை வெளியில் கொடுக்கும் விளையாட்டு நிர்வாக சேவை (Sports Management Services), நிகழ்நிலை விளையாட்டு செய்திகள் (Online Sports News), முதலியன இவர்களது எதிர்கால திட்டங்களில் சில. வெற்றி போதை தலையில் ஏறாமல், தமது பங்குதாரர்களுக்கு சிறந்த லாபம் அளிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டி செயலாக்கும் பொறுப்பு தமக்கு இருப்பதை நன்கு உணர்ந்து அதற்கேட்டபடி செயல்படுகிறார் ராம்கி.

### நன்றி

அடக்கம் மிகுந்த ராம்கி, தனது வெற்றிக்குப் பின்னால் இருந்த மனிதர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்:

1. சங்கரன், சுப்பு, விச்சு - நம்பிக்கைக்குரிய வழிகாட்டிகள்; இவரை சரியான இடத்தில் கொண்டு சேர்த்தவர்கள்.
2. ஜான் ரைட்- பயிற்சியில் தொலைநோக்குப் பார்வை.
3. சச்சின், சேவாக் - இவர் மேல் மிகவும் நம்பிக்கை வைத்து இருப்பவர்கள்.
4 தனஞ்சய், வெங்கி-இவருக்குத் துணையாக, தூணாக இருப்பவர்கள்.
5. டி.என்.சி.ஏ., பி.சி.சி.ஐ., ஐ.சி.சி., எச்.பி.பி.- பங்காளிகள்
6. பெற்றோர், மனைவி புஷ்கலா, மகள்கள்- வர்ஷிணி, ரஞ்சனி - அமைதியாகத் தொடரும் ஆதரவு. பக்கபலம். இவர்களது ஆதரவு இல்லாமல் ஒன்றுமே சாதித்திருக்க முடியாது.




### சென்னையின் முதன்மை சார்ந்த வெற்றி வீரர்

பேரவா மிகுந்த கிரிக்கெட் வீரர்-வங்கித் தொழிலினர் - கிரிக்கெட் பகுப்பாய்வாளர் - வெற்றி பெற்ற தொழில் முனைவர் - என்று பல தூரம் கடந்து வந்து இன்று வெற்றியுடன் திகழ்கிறார் ராமகிருஷ்ணன். அந்தப் பாதையினூடே, கிரிக்கெட் விளையாடும் முறையையும், ஆடும் நுணுக்கம் மற்றும் திட்டமுறையின் முக்கியத்துவத்தை விளக்கி, கோடிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்களின் கனவையும் நிஜமாக்கி, பல விளையாட்டு வீரர்களின் அவாவையும் பூர்த்தி செய்து, பல சக பணியாளர்களுக்கு உதவி செய்து, பல முன்னாள் விளையாட்டு வீரர்களை அவர்கள் மிகவும் விரும்பும் விளையாட்டோடு இணைத்து அதனால் அவர்களை சம்பாதிக்க வைத்துள்ளார். இந்தியா, விளையாட்டு பகுப்பாய்வில் உலகிலேயே முன்னிடம் வகுக்கும் என்று திடமாக நம்புகிறார் இவர்.

விளையாட்டு பகுப்பாய்வில் முன்னோடியாக விளங்கி, இன்னும் பல அரிய சாதனைகளை நிகழ்த்த இருக்கும் ராம்கி என்னும் ராமகிருஷ்ணன் சென்னையின் முதன்மை சார்ந்த வெற்றி வீரராக உயர்ந்து நிற்கிறார்.